EJCTS
www.ejcts.mayas.info

Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 33

## இலக்கியங்களில் சமூக பண்பாட்டுக் கூறுகள் ஒரு பார்வை

***க.தேவசேனா***

*பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்*
*மதுரை சிவகாசி நாடார் பயோனியர்*
*மீனாட்சி பெண்கள் கல்லூரிஇ பூவந்த.,*

### *முன்னுரை*

தமிழ் இலக்கியம் ஒரு நீண்ட நெடிய பரப்புடையது. காலந்தோறும் புதிய புதிய இலக்கியக் கோட்பாடுகளைக் கொண்ட இலக்கிய வகைகள் தோன்றுகின்றன. பல்வேறு வகைகள் தோன்றுகின்றன. இலக்கியங்கள் காலத்தைக் காட்டும் கண்ணாடியாகவே படைக்கப்படுகிறது. மேலும் நம் மரபு மாறாமலும் பண்பாடு மீறாமலும் படைக்கப்படுகிறது. சமூகத்தின் ஓர் அங்கமாகத் திகழும் இலக்கியப் படைப்பாளிகள் மக்களின் வாழ்க்கை முறைகளையும், பழக்கவழக்கங்களையும் பண்பாட்டுக் கூறுகளையும் தங்கள் படைப்புகளில் தொய்வின்றி தந்த வண்ணம் உள்ளனர். அப்படைப்புகளின் வடிவம் மாறுகிறதே தவிர பொருண்மையானது மனிதனையும் அவனது வாழ்வியலையும் பண்பாட்டையுமே பாடுபொருள் ஆக்குகிறது. பண்பாட்டுக்கூறுகள் சங்க இலக்கியங்கள் மட்டுமல்லாமல் சமகால இலக்கியங்களுடனும் தொடர்பு கொண்டுள்ளது. சமகால இலக்கியங்களின் கருத்துக்களம் புதுநோக்கோடு சென்றாலும் பண்பாட்டுக் கூறுகளை பதிவு செய்யும் இடங்களில் சங்க இலக்கியங்களுடன் தொடர்பு உடையதாகவே

காணப்படுகிறது. இவற்றை ஆராயும் நோக்கத்துடனேயே இக்கட்டுரை நோக்கப்படுகிறது.

## சங்க இலக்கியங்கள் - சமகால இலக்கியங்கள்

சங்க இலக்கியங்கள் அறக்கருத்துக்களை வேராகக் கொண்டது. சங்க இலக்கியங்கள் அக்காலக் கட்டத்தில் வாழ்ந்த தமிழர்களின் தினசரி வாழ்க்கை நிலைமைகளைப் படம்பிடித்துக் காட்டுவதாய் உள்ளன. பண்டைத் தமிழரது காதல், போர், வீரம், ஆட்சியமைப்பு, வணிகம் போன்ற நடப்புகளைச் சங்க இலக்கியப் பாடல்கள் அறியத் தருகின்றன. சங்க இலக்கியங்கள் எட்டுத்தொகை, பத்துப் பாட்டு நூல்கள் ஆகும்.

சமகால இலக்கியங்களானவை புதுமை நோக்குடன் பயணிக்கிறது. தமிழ் இலக்கியப் பெரும் பரப்பில் தோன்றிய கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, நாடகம், நகைச்சுவை துணுக்குகள், கருத்துப்படங்கள் போன்ற பல வகைப்பாடுகளுடைய அத்தனை இலக்கியங்களையும் ஒட்டுமொத்தமாகக் குறிக்கும் பெயராக இக்கால இலக்கியம் என்னும் தொடர் வழங்கப்பட்டு வருகிறது.

## பண்பாடு - ஓர் விளக்கம்

'பண்' என்ற பெயர்ச் சொல்லைக் கொண்டு பண்பு என்ற சொல் உருவாகிறது. பண் என்பதற்கு ஒழுங்கு என்பது பொருள் பண்பு என்பது உயிர்ப்பொருள்களின் குணம் என்ற பொருளைத் தரும் என்பதும் அபிதான சிந்தாமணியின் விளக்கமாகும். குணங்களைக் கொண்டு விளங்குகின்ற உயிர்களின் பண்பட்ட நிலையே பண்பாடாகும். ~பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்~ என்று சங்க இலக்கியக் கலித்தொகை குறிப்பிடும். பண்பாடு என்பது மனிதன் பெற்றுள்ள அறிவு, நம்பிக்கை, கலை, சட்டம், ஒழுக்கநெறிகள், வழக்கங்கள், தகுதிகள், பழக்கங்கள் ஆகியவற்றிறன் தொகுப்பாகும்.

## பண்பாடு குறித்த வரையறைகள்

பண்பாடு என்பது மனிதன் சமுதாயத்தின் ஓர் உறுப்பினன் என்ற நிலைமையில் அறிவு, நம்பிக்கை, அறவாழ்க்கை, சட்டம், வழக்கங்கள் முதலியன பற்றிப் பெற்ற ஒருவித வாழ்க்கை முறையாகும். ஒரு சமுதாயத்தில் உள்ள மக்கள் வாழ்க்கையை நடத்தும் முறையே பண்பாடாகும். மானுடவியலாளர்.

# இலக்கியங்களில் சமூக பண்பாட்டுக் கூறுகள் ஒரு பார்வை

~பண்புடையார் பட்டுண்டு உலகம் அ∴தின்றேல்
மன்புக்கு மாய்வது மன் - திருக்குறள்.

பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து செயல்படும் போது உண்டாகும் நடத்தைமுறைகளின் சேர்மமாகும். இது அந்தந்தச் சமூகத்திற்கு மட்டுமே உரியது.

ஒரு சமூகத்தின் அல்லது தனிமனிதனின் உலகப் பார்வையைப் பண்பாடே நிர்ணயிக்கின்றது. பண்பாடானது ஒரு சமூகத்தின் வாழ்வுமுறையின் தொகுப்பாகும்.

பண்பாடென்பது ஒவ்வொரு தலைமுறையினராலும் கற்று அடுத்த தலைமுறையினருக்கு கையளிப்பதாகும்.
சமூகமும், பண்பாடும் :

உலகில் வாழும் ஒவ்வோர் தனிமனிதனும் ஏதேனும் ஒரு குழுவிற்குள் தன்னை இணைத்துக் கொண்டே வாழ்கிறான். அவ்வாறு இணையும் நிலையில் தான் சார்ந்துள்ள சமூகத்தின் பண்பாட்டு அடையாளங்களைத் தானும் எதிரொலிக்கத் துவங்குகிறான்.

பண்பாடு தனிமனிதனைக் கூட்டுவாழ்விற்குப் பற்றிச் செல்கிறது என்றும் அதன்வழியே சமூகம் உருவாகின்றது. என்றும் புரோனிஸ்லா குறிப்பிடுகிறார்.

பண்பாடு இன்றிச் சமூகம் ஓர் அமைப்பாக அமையவோ இயங்கவோ முடியாது என்பதால் சமூகவியல் அறிஞர்கள் சமூக பண்பாட்டு அமைப்புமுறை என்று சேர்த்தே குறிப்பிபடுகிறார்கள். சமூகமும் பண்பாடும் இணைந்து அமைவதால் சமூக அமைப்புமுறை வெறும் அமைப்புமுறை என்றில்லாமல் சமூகப் பண்பாட்டு அமைப்பு முறை என்ற நிலையில் இயங்குகிறது எனக் குறிப்பிடுவர்.

மனிதக் கூட்டமான சமூகம் தங்களிடம் கொண்டுள்ள வாழ்க்கை முறைகளின் ஒழுக்கநெறிகளின் தொகுதிகளைப் பண்பாடு என வரையறுக்கும் சூழலில் அச்சமூக வளர்ச்சிக்கும் நிலைபேற்றிற்கும் பண்பாட்டின் தேவை அறியப்படுகிறது.

எனவே, பண்பாடு இன்றி ஒரு சமூகம் நிலைத்திருக்க இயலாது எனக் கருதப்படுகிறது.

## சமூகப் பண்பாட்டுக் கூறுகள்

உலகில் படிப்படியாக நாகரிகம் படைத்த நன்மக்களின் செவ்விய செயல்முறைகளால் புலப்படுவது பண்பாடு. இடத்துக்கும், காலத்துக்கும,; சூழ்நிலைக்கும் ஏற்ப பல்வேறு இனமக்களிடையே பல்வேறு வகைகளிலே பண்பாட்டுக் கூறுகள் புலப்படுகின்றன. மக்களின் எண்ணம், மொழி, செயல் ஆகியவற்றிலெல்லாம் அவை இழையோடி நிற்கின்றன. உலக அரங்கிலே மக்களின் சமூகப் பண்பாட்டுக் கூறுகளை நூல் வாயிலாகவும், அனுபவ வாயிலாகவும் இனங்கண்டு அறிவது இக்காலத்தின் தேவை எனலாம்.

சமகால இலக்கியங்களில் நாவல் இலக்கியங்கள் சமூகப் பண்பாட்டுக் கூறுகளை மிகுதியாகக் கொண்டு படைக்கப்படுகிறது. காதல்இ வீரம்இ நட்புஇ விருந்தோம்பல்இ ஈகைஇ கொடைஇ அரசுஇ கற்புடைமைஇ போர்இ பழக்கவழக்கங்கள்இ வாழ்க்கைமுறைஇ உலக ஒருமைப்பாடுஇ பண்பாடு நாகரிகம்இ சடங்குகள்இ நம்பிக்கைகள்இ ஆட்சிமுறை என்றவாறாக பல சமூகப் பண்பாட்டுக் கூறுகள் கருதப்படுகிறது. இவற்றுள் சங்க இலக்கியங்களிலும் சமகால இலக்கியங்களிலும் தொடர்ந்து பயணித்துக் கொண்டே வருகின்ற சமூகப் பண்பாட்டுக் கூறுகள் சிலவற்றைக் காண்போம்.

## விருந்தோம்பல்

தம் வீட்டுக்கு வரும் விருந்தினரை முக மலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர்.

திருவள்ளுவர் இல்லறவியலில் விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரத்தையே அமைத்திருக்கிறார். இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார். முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பதை,

மோப்பக்குழையும் அனிச்சம்' என்ற குறளில் என்ற குறளில் எடுத்துரைகிறார். விருந்தினரை போற்றுதல் இல்லறக் கடமையாக இருந்தது.

விருந்தினராக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்~ காசிக்காண்டம்

விருந்தினராக ஒருவர் வந்தால் அவரை வியந்து உரைத்தல், நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல், முகமலர்ச்சியுடன் அவரை நோக்குதல், ~வீட்டிற்குள் வருக~ என்று வரவேற்றல், அவர் எதிரில் நிற்றல், அவர்முன் மனம் மகிழும்படி பேசுதல், அவர் அருகிலேயே அமர்ந்து கொள்ளுதல், அவர் விடைபெற்றுச் செல்லும் போது வாயில்வரை பின் தொடர்ந்து செல்லல், அவரிடம் புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்புதல் ஆகிய ஒன்பதும் விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கமாகும்.

விருந்தோம்பல் சமகால இலக்கியமான சிறுகதையிலும் இடம் பெற்றுள்ளது. 'கோபால்லபுரத்து மக்கள்' என்னும் சிறுகதையில் அன்னமய்யா என்ற படைப்பு தனக்கு இருந்த குறைவான உணவான கம்மஞ்சோற்றையும் துவையலையும் வழிப்போக்கராக வந்தவருக்கு அமுதுபோல் விருந்தோம்பல் செய்கிறார்.

மருந்தே ஆயினும் விருந்தொடு உண்~ என்று கொன்றைவேந்தனில் ஔவையார் பாடியுள்ளார்.

## கொடைப் பண்பாடு

ஈகை என்பது சமூகப் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்றாகும்.

~செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே~

என்றார், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார். ஆற்றுப்படை இலக்கியங்கள் கொடை இலக்கியங்களாகவே உள்ளன. பதிற்றுப்பத்து சேர அரசர்களின் கொடைப் பதிவாகவே உள்ளது.

இல்லோர் ஒக்கல் தலைவன்
பசிப்பிணி மருத்துவன் என்றெல்லாம்
போற்றப்பட்டனர்.
வழங்குவதற்குப் பொருள் உள்ளதா?
என்றுகூட பார்க்காமல் கொடுக்கும்.
பிடவூர்கிழான் மகன் பெருஞ்சாத்தனை நக்கீரர் பாராட்டுகிறார்.

"உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன்" என்கிறார் ஔவையார்

-மு.தங்கராசன் என்ற சிங்கப்பூர் தமிழறிஞர் தனது “செஞ்சோற்றுக் கடன்” என்னும் சிறுத்தையில் அமராவதி என்னும் பாத்திரம் கொள்ளையர்களால் சிக்கித் தவிக்கும் வேளையில் சிறுவயதில் தான் உணவளித்து வளர்த்த நாய் காப்பாற்றுவதாக படைத்து ஈகை பலனிளக்கும் என்பதைக் காட்டியுள்ளார்.

“சூல்” நாவலில் கொப்புளாயி என்ற பாத்திரம் நீர்,மோர், தயிர் போன்ற ஆகாரங்களை கொடையளிப்பதாக சோ.தர்மன் அவர்கள் படைத்து உள்ளார்.

## நம்பிக்கைகள்

சங்க இலக்கிய நூல்களுள் ஒன்றான குறுந்தொகையிலும் பிறைவழிபாடு குறித்த குறிப்பு இடம் பெற்றுள்ளது.

“வளை உடைத்தனையது ஆகி,புலா தொழ
செவ்வாய் வானத்து ஐயெனத் தோன்றி
இன்னாப் பிறந்தன்று, பிறையே: அன்னோ”,

என்னும் பாடல் குறுந்தொகையில் அமைந்துள்ள கடம்பனூர்ச் சாண்டிலியனின் பாலைத் திணைப்பாடல் ஆகும். இப்பாடலில் பிறைத் திங்கள் வண்ணத்தாலும் வடிவாலும் சொல்லப்பட்டுள்ளது. இத்தகைய பிறைநிலா மாலையில் செவ்வானத்தில் தோன்றும.; அப்பொழுது பலராலும் தொழப்பெறும் பெருமையுடையது. இதன் மூலம் பிறைநிலவை வழிபடும் நம்பிக்கை பழங்காலத்திலேயே தமிழ் மக்களிடம் இருந்துள்ளதை அறியமுடிகிறது.

“அருங்கடி மூதூர் மருங்கில் போகி
யாழ்இசை இனவண்டு ஆர்ப்ப, நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை,
அரும்பு அவிழ் அலரி தூவல், கைதொழுது
பெருமுது பெண்டிர், விரிச்சி நிற்ப”

## முல்லைப்பாட்டு

தலைவனை பிரிந்துவாடும் தலைவி அவனது வருகையை விரிச்சி கேட்டு நிற்பதாக நம்பிக்கையோடு பாடியுள்ளார்.

“சூல்” நாவலில், மழைக்காலத்தில் மட்டுமே அபூர்வமாகக் காணப்படும் நாமக்கோழி பற்றிய நம்பிக்கையை ஆசிரியர் சுட்டியுள்ளார். நாமக்கோழியின் வரவு கிராமத்தின் செழிப்பையும், அவ்வருட வெள்ளாமையின் உத்திரவாதத்தையும் மழை அதிகரிப்பையும், நீர்நிலைகளின் நிரம்பலையும் உறுதிசெய்து மக்களின் சந்தோஷத்தையும் குதூகலத்தையும் கொண்டு சேர்க்கும்

வரவாகும். “சங்கிலிப் பயலைச் சுற்றிலும் ஆட்கள் கூடி நின்று கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இந்த வருடம் முதலிலேயே தட்டுப்பட்டு விட்டதால் சம்சாரிகளுக்கு சந்தோஷம் பிடிபடவில்லை". வெள்ளாமைகள் வீடு நிறைந்தது மாதிரிதான் என்றவாறான நம்பிக்கைகள் நாவலில் காணப்பட்டது.

மேலும் தூக்கனாங்குருவிக் கூடுகளில் கீழப்பக்கம் உள்ள வாசல் போக பக்கவாட்டில் ஒவ்வொரு கூட்டிலும் ஒரு வாசல் இருக்கும். இந்த பக்கவாட்டு வாசல்கள் தெற்குப்பக்கம் பார்த்தபடி இருந்தால் அந்த வடகிழக்குப் பருவமழை. அதாவது வடக்கத்தி மழை ஜாஸ்தி. பெரும்பான்மைக் கூடுகளின் வாசல்கள் வடக்குப் பக்கம் இருந்தால் அதாவது தென்மேற்குப் பருவமழை ஜாஸ்தி. இவ்வாறு மழை பற்றி நம்பிக்கை கொண்டிருந்தனர்.

## அரசியல் பண்பாடு

வேந்தர்கள் ஆட்சியில் வேள்வி தலைமையிடம் பெற்றதையும், வேள்வியைச் செய்ய உரிமை உடையவராகப் பார்ப்பனர் தலைமையிடம் பெற்றதையும் பண்டை இலக்கியங்கள் பதிவு செய்து வைத்துள்ளன.

கேள்வி கேட்டுப் படிவம் ஒடியாது
வேள்வி வேட்டனை... (பதி பத்து) 74)

அதே போல அரசுப் பதவி உயர்ந்தவர்களுக்கே என்று “சூல்” நாவலிலும் வெளிப்படுத்தியுள்ளது. அரசு எட்டயபுர மகாராஜாவுக்கேயுரியது அவரின் ஆட்சிக்குகீழ் தான் சிறு குறு சாதி மக்கள் வாழ்க்கை நடத்தி வந்தனர்.

## நீதி கூறும் பழக்கம்

மன்னராட்சியின் போது மன்னரின் அவைக் களத்தில் குற்றவாளிகள் விசாரிக்கப்பட்டுத் தண்டனை கொடுத்தனர். சமகால இலக்கியங்களில் அவற்றில் படைக்கப்படும் பெரிய கதாபாத்திரமே அனைவரையும் ஒன்றுகூட்டி பஞ்சாயத்து என்ற பெயரில் தீர்ப்பு வழங்கினர்.

கருவாச்சி காவியத்தின் தொடக்கமே பஞ்சாயத்து கூட்டத்திலிருந்து தான் நகர்கிறது. புகார் கொடுப்பவர்களும் புகார் சுமத்தப்பட்டவர்களும் பஞ்சாயத்திற்கு அஞ்சேகால் ரூவா முறிவைக்க வேண்டும் என்ற வழக்கம் இருந்ததை ஆசிரியர் இக்காவியத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சமகால இலக்கியங்கள் யாவுமே நீதி கூறும் பழக்கத்தை தன்கையில் எடுத்து தன் கருத்தினையே கூறுவதாக அமைக்கப்படுகிறது.

## சடங்கு முறைகள்

ஒவ்வொரு பகுதியிலும் வாழ்கின்ற மனிதர்கள் இந்த இறப்பினை ஒட்டி ஒவ்வொரு வகையான சடங்குகளை பின்பற்றி வருகின்றனர். இவை பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களிலும் இடம் பெற்றுள்ளன.

குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆள் அன்று என்று வாளின் தப்பார்
தொடர்ப் படுஞமலியின் இடர்ப்படுத்து இரிகிய
கேள்அல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை இன்றி, வயிற்றிதுத் தீத் தணிய
தாம் இரந்து உண்ணும் அளவை
ஈன்றோ, இவ் உலகத்தானே?”

இப்பாடல் பழங்காலத்தில் மன்னர்கள் போரின் போது விழுப்புண்பட்டு மடிவதையே பெருமையாகக் கருதினர். இவற்றுள் இறந்த குழந்தையின் உடலை வாளால் அருபிளந்து வடுப்படுத்தி அடக்கம் செய்வர்.

கவிஞர் வைரமுத்துவின் கருவாச்சி காவியத்தில், தாய் பெரிய மூக்கி இறந்தவுடன் அவளுக்குச் செய்யும் சடங்குகளாக அவனின் பிறந்த வீட்டில் இருந்து பஞ்சு கொண்டுவந்து பொணத்துக்குப் பக்கத்துல நட்டிருந்த கொடிகள்ளி மேல கோடி சாத்தி அழுததாகவும் சனிக்கிழமை யாராவது இறந்து போனால் ஒரு கோழிக்குஞ்சு அடிச்சுப் பாடையில் தொங்க விடுவது வழக்கம். அந்தச்சடங்கு முறையும் இடம் பெற்றுள்ளது.

மேலும், மழை அளவுக்கு மீறி பெய்துள்ளதால் அவற்றினை வேண்டாம் எனக்கூறி சடங்கு செய்கின்றார். ஊர்மக்களில் இருவர் ஒருவரையொருவர் மாவினை அள்ளிப் போட்டு போதுமா? எனக்கேட்டு, போதும் என்றவுடன் மழையும் நின்றுவிடும் என்று “சூல்” நாவலில் சடங்கு மேற்கொள்ளப்படுகிறது.

## முடிவுரை

பழங்காலம் முதல் இன்றுவரை உள்ள இலக்கியங்கள் யாவும் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைகளையும் பின்பற்றி வருகின்ற சடங்குகளையும் இலக்கியங்கள் வாயிலாகவே அறிந்து கொள்ள முடிகின்றது. படைப்பாளிகள் உருவெடுத்து வந்தாலும் படைப்புக்களமும் படைப்பு நோக்கமும் மாறவில்லை. மாறி வருகின்ற காலகட்டத்தில் மனிதனின் மனநிலையும் புதுமை நோக்கியே செல்கிறது. எனவே இன்றைய படைப்பாளிகளும் நம் சங்க இலக்கியங்கள்

பறைசாற்றிய பண்பாட்டுக் கூறுகளையே கருத்துக்களமாக்கி மரபினை பின்பற்றும் பண்பாடுடையவர்களாகவே படைப்பாக்கம் செய்கின்றனர்.

சங்க இலக்கியங்களின் பாடுபொருள்கள் சமகால இலக்கியங்களுடன் தொடர்புடையதாகவே அமைகிறது என்று இக்கட்டுரை பறைசாற்றுகிறது.